**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-20 No. 02 April-June 2026**

# சங்க இலக்கிய விளையாட்டுகளில் தாவரங்கள் விலங்குகள் பறவைகளின் பங்களிப்புகள்

**முனைவர் இரா.மதன்ராஜ்**
M.A.,B.Ed.,SET.,NET.,Ph.D(BDU).
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரம்பலூர்.621 212.
ORC ID : https://orcid/0009-0005-3631-433X

**DOI:** 10.5281/Arimaa.20022601

## ஆய்வுச் சுருக்கம்

சங்க கால மக்கள் வாழ்வியலில் விளையாட்டு ஒரு அங்கமாகக் காணப்படுகின்றன. சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக விளையாடுவர். தலைவன் தலைவியோடும், தலைவி தலைவனோடும், தோழியோடும் விளையாடி மகிழ்வார்கள். இதன் மூலம் அவர்களுடைய மனமும், உடலும் சமநிலை அடைந்து புற்றுணர்வு பெறுகிறது. இத்தகைய விளையாட்டு நிகழ்வுகளில் தாவரங்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் மிகுதியாக இடம்பெறுகின்ற வாழ்வியலை அறியமுடிகிறது.

## திறவுச் சொற்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தலைவன்,தலைவி, சிறுவர்கள், தவரங்கள், விலங்குகள், பறவைகள்,விளையாட்டுகள் போன்றவையாகும்.

## முன்னுரை

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் மக்கள் சமுதாயத்துடன் தாவரங்கள், விலங்குகள், மற்றும் பறவைகளோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. அவர்களுடைய அக வாழ்விலும், புற வாழ்விலும் இரண்டறக் கலந்து காணப்பட்டன. தலைவன், தலைவி, சிறுவர்கள், தோழி, பரத்தையர் போன்றவர்கள் மனம் அமைதி பெறவும், உடலைச் சோர்வு இல்லாமல் இருக்கவும், தனிமையைப் போக்கவும் அவர்களைச் சுற்றிவுள்ள தாவரங்கள், விலங்குகள், மற்றும் பறவைகளோடு விளையாடி புத்துணர்வுப் பெறுவர்.

**விளையாட்டுகளில் தாவரங்கள்**

**மூங்கில்** :

சங்க இலக்கியத்தில் சிறுவர்கள் தாம் வாழும் இடத்தில் காணப்படுகின்ற மரங்களில் ஏறி விளையாடி மகிழ்வார்கள். அத்தகைய விளையாட்டுகளில் மூங்கில் மரமும் இடம்பெற்றிருந்தன. இதனை,

**“கழை கண் இரும் பொறை ஏறி விசைசுத்து எழுந்து**
**குறக் குறுமாக்கள் தாளம் கொட்டும் அக்**
**குன்றகத்ததுவே குழு மிளைச் சீறூந்”**[1]

என்ற நற்றிணை பாடல் குறிப்பிடுகிறது. சிறுவர்கள் மூங்கிலால் ஆன புல்லாங்குழல் ஒலிக்க பெரிய பாறைகளில் உள்ள மூங்கில் மரத்தின் மேல் ஏறிக் கொண்டு தாளம் கொட்டி விளையாடியதை அறியமுடிகிறது.

**புன்னை** :

மக்கள் வாழ்வில் மரங்கள் இரண்டறக் கலந்திருப்பதை, **“உலக இலக்கியங்களில் ஓரறிவு உயிரை மகளாக, உடன் பிறந்தவளாகக் கருதும் எண்ணத்தைத் தமிழ் இலக்கியம் தான் முதன் முதலில் குறித்துள்ளதாகக் கூறுவர். தாவரங்களோடு ஒட்டி, உறவாடி வாழ்ந்திருந்தால் இவ்வுணர்வும் எண்ணமும் தமிழர்க்குத் தோன்றியிருக்கலாம்”**[2] என்று ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இதனை,

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது**
**நம்மினும் சிறந்தது நுவ்வையா குமென்று**
**அன்னை கூறினாள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே**
**விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப**
**வளம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்**
**துறைகெழ கொண்க நீ நல்கின்**
**நிறைபடு நீழல் பிறவுமா ருளவே”**[3]

என்று நற்றிணை பாடல் மூலம் புன்னை மரம் சிறியதாக இருக்கும்போது தாய் தன் மகளை அதனுடன் விளையாட செய்ததும்,

புன்னை மரத்தை தன்னுடைய உடன்பிறந்த தமைக்கையாகவும் கருதும் வழக்கம் அக்காலச் தமிழ்ச் சமூகத்தில் நிலவியதைக் காணமுடிகிறது. மேற்கண்ட காட்சிகள்வழி மனித வாழ்வில் புன்னை மரம் நெருங்கிய உறவாகச் சூழலியலோடு ஒன்றிணைந்ததை அறியமுடிகிறது.

கடற்கரையில் தலைவன் தன்னருகில் இல்லாதபோது தலைவி தோழியுடனோ, பறவைகளுடனோ, பிடித்த விலங்குகளுடனோ விளையாடுவது இயல்பாகும். இதனை,

> "………. …………. ……….. **என்னோடும்**
> **இன்இணர்ப் புன்னைஅம் புகர் நிகழ்**
> **பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே**"[4]

என்று குறுந்தொகை பாடல் கூறுகிறது. தலைவி புன்னை மர நிழலில் நண்டைப் பிடித்து விளையாடிய காட்சியைக் காணமுடிகிறது. தலைவி கடற்கரையில் விளையாடுவதற்கு ஓர் அங்கமாகப் புன்னை மரம் காணப்படும் வாழ்வியலை உணரமுடிகிறது. மேலும்,

> **"உம்பளம் தழீஇய உயர்மணல் நெடுங்கோட்டுப்**
> **பொங்குதிரை உலாவும் புன்னை அம்கானல்**
> **கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா"**[5]

என்னும் பாடலில் புன்னை மர நிழலில் தலைவி விளையாடியதை போல் மணிமேகலையில் கிள்ளிவளவன் என்ற மன்னன் கடற்கரையில் புன்னை மரத்தின் நிழலில் உலாவியதை குறிப்பிடுகிறது.

தலைவனுக்குத் தலைவி எவ்வாறு உயிரோ அதுபோல் தலைவிக்கு அவளுடன் இருக்கின்ற தோழியும் உயிராவாள். காலையிலும், மாலையிலும் தலைவி தோழிவுடன் சோலையில் நீராடி விளையாடுவாள். தோழி தன் வாழ்வைத் தலைவிக்காக அர்ப்பணிக்கிறாள். இவர்களின் விளையாட்டுகளில் தாவரங்கள், விலங்குகள், பறவைகளும் இடம்பெறுகின்றன. புன்னை மரத்தினடியில் விளையாடும் தலைவியின் விளையாட்டை,

> "……… ………. …….. **குறுமகள்**
> **விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த**
> **புன்னை நுண் தாது பொன்னின் நொண்டு**"[6]

 ISSN: 2320-4842
Vol-20 No. 02 April-June 2026

என்று அகநானூறு தெரிவிக்கின்றது. கடற்கரையில் தலைவியும் தோழியும் பசுமையான புன்னை மரத்தில் உள்ள மகரந்த தாதுவைப் பொன் என எண்ணி அதனோடு இருவரும் விளையாடி மகிழ்ந்தனர். நெய்தல் நிலத்தில் வாழும் தலைவி, தோழியர் விளையாட்டுகளில் புன்னை மரத் தாது ஒன்றாகத் திகழ்வதோடு, அவர்கள் இயற்கையோடு விளையாடிய வாழ்வியலை அறியமுடிகிறது.

**வேம்பு** :

மக்கள் சமத்துவத்தைத் தெளிவுப்படுத்தும் காரணிகளில் ஒன்று விளையாட்டு ஆகும். சிறுவர்கள் மரத்தின் அடியிலும், கடற்கரையிலும் விளையாடி மகிழ்வர். இதனை,

**"பொரி அரை வேம்பின் புள்ளிநீழல்**
**கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்து**
**கல்லா சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்"**[7]

என்னும் நற்றிணை பாடல் வழி, சிறுவர்கள் வேப்பமரத்தின் நிழலில் நெல்லிக்காய்களைக் கொண்டு விளையாடியதை அறியமுடிகிறது.

**தென்னை** :

சங்க காலத்தில் சிறுவர்கள் மரங்களில் காணப்படும் குறிப்பிட்ட காய்களைக் கொண்டு விளையாடுவது மரபாகும். அவற்றில் தென்னை, பனை, நெல்லி, கோரை எனப் பல தாவரங்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன. இதனை,

**"வன்கை வினைஞர் புன் தலைச் சிறாஅர்**
**தெங்கு படுவியன் பழன் முனையின்"**[8]

என்று புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. இதன் மூலம் சிறுவர்கள் தென்னை மரத்தின் காய்களைப் பறித்து விளையாடிய வாழ்வியலை உணரமுடிகிறது.

**காஞ்சி** :

நீர் நிலைகளில் மக்கள் விளையாடுதலும், புனலாடுதலும் மரபாகும். அருகில் காணப்படும் மரங்களில் ஏறி விளையாடியும், நீரில் குதித்தும் பொழுதைப் போக்கினர். இதில் காஞ்சி மரமும் இடம்பெற்றிருந்தன. இதனை,

**"போதுஆர் கூந்தல் நீவெய் யோளொடு**

**தாதுஆர் காஞ்சித் தண்பொழில் அகல்யாது**
**ஆடினை என்ப ......... ..........”**[9]
**“காஞ்சி நீழல் தமர் வளம் பாடி**
**ஊர்க்குறு மகளிர் குறுவழி”**[10]
**காஞ்சி நீழல் குரவை அயரும்**
**தீம்பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன்”**[11]

போன்ற அகநானூற்றுப் பாடல்களில் தலைவன் புதிய மல்;மலரணிந்த பரத்தையோடு குளிர்ச்சி பொருந்திய காஞ்சி மரங்கள் செறிந்த சோலைகள் சூழ்ந்த அகன்ற ஆற்றில் புனலாடியதையும், நீரில் குதித்து விளையாடியதையும் குறிப்பிடுகிறது.

**விளையாட்டுகளில் விலங்குகள்**

**காளை** :

அக்காலத் தமிழர்கள் வீரத்திற்கு முதன்மை வழங்கியவர்களாக வாழ்ந்தனர். அவர்களின் வீரத்தின் அடையாளமாகக் கருதப்படுவது ஏறு தழுவுதல் ஆகும். ஏறு தழுவுதல் என்பது முல்லை நிலத்தில் காளையினை அடக்குகின்ற நிகழ்வு ஆகும். ஏறு தழுவுதல் கலித்தொகையில் 101, 102, 103, 104, 105, 106, 107 ஆகிய பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மாட்டை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவது ஏறு தழுவுதல் ஆகும். கொம்பைப் பிடித்து அடக்குதல், கழுத்தைப் பிடித்துக் கொண்டு காளையின் மார்பில் தொங்குதல், கழுத்தைத் திருகுதல், இமிழைத் தழுவுதல், தோளில் ஏறுதல் போண்டாவை காளையை அடக்கும் முறைகளாகும். **“காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை. வாலைப் பிடித்தல் தாழ்மை என்பது தமிழர் கொள்கை”**[12] என்று ரா.பி. சேதுப்பிள்ளை தமிழரின் வீரத்தைக் குறிப்பிடுகிறார். இதனை,

**“பாடுகம் வம்மின் பொதுவன் கொலை ஏற்றுக்**
**கோடு குறி செய்த மார்பு”**[13]

என்றும்,

**“மருப்பில் கொண்டும் மார்பு உறத் தழீஇயும்**
**எருத்திடை அடங்கியும் இமில்இறப் புல்லியும்”**[14]

என்றும் கலித்தொகை பாடல்கள் ஏறு தழுவுதலில் ஏற்பட்ட புண்ணைப் பெருமையாகக் கருதிய வாழ்வியலைத் தெரிவிக்கின்றன.

இத்தகைய வீர விளையாட்டு அக்காலம் முதல் இந்தக் காலம் வரை தமிழரின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கிறது. அக வாழ்விலும் புற வாழ்விலும் வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டிலும் விலங்கோடு இயைந்து வாழ்ந்த வாழ்வியல் தொடர்பைச் சங்க இலக்கியங்களில் பெரிதும் காணப்படுகின்றன.

**விளையாட்டுகளில் பறவைகள்**

சங்க காலம் முதல் தற்காலம் வரை மக்கள் வாழ்வியலில் விளையாட்டு ஓர் அங்கமாகத் திகழ்கிறது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விளையாடுகின்ற சூழலைக் காணமுடிகிறது. மக்கள் விளையாட்டுகளில் பறவைகளும் இடம்பெற்றன. சங்க கால மக்கள் கௌதாரி (பட்டின.77), குருகு (நற்.159), தம்பலப்பூச்சி (நற்362), நாரை (அகம்.226) போன்ற பறவையினங்களோடு விளையாடினர்.

**கௌதாரி, கோழி, காடை பறவையினங்கள்** :

சங்க காலத்தில் சிறுவர்கள் போர்ப் பயிற்சிக்காகச் சண்டை செய்து விளையாடினர். சிறுவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து இருவருக்கும் இடையே தாங்கள் வளர்த்த பறவையினைச் சண்டையிட்டு வெற்றிப் பெறுவது பறவைச் சண்டையாகும். அந்தப் பறவைச் சண்டைகளில் கௌதாரி, கோழி, காடை பறவைகள் இடம்பெற்றன. இத்தகையப் பறவைச் சண்டைகளை,

**“உறைக் கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல் விளையாட”**[15]

என்று பட்டினப்பலையும்,

**“பொறிப்புறப் பூழின் போர்வல் சேவல்”**[16]

என்று புறநானூறும்,

**“செறிந்து ஒளிர் வெண்பல்லாய் யாம் வேறு இயைந்த
குறும் பூழ்ப்போர் கண்டோம்; அனைத்தல்லது யாதும்
அறிந்ததோ இல்லை நீ வேறு ஓர்ப்பது”**[17]

என்று கலித்தொகையும் ,

**“சூறற் புறவின் அணில் பிளிற்றுஞ்சூழ் படப்பை
ஊர் கெழு சேவ லிதலொடு போர் திளைக்கும்”**[18]

என்று ஐந்திணை எழுபது எடுத்துக்காட்டுகின்றன. சிறுவர்கள் விளையாட்டுகளில் கௌதாரிக்கும் ஆட்டுக் கிடாய்க்கும் சண்டை வைத்து விளையாடப்பட்டது. குறும்பூழ் பறவைகளுக்குப் போர்ப் பயிற்சி சண்டையினைப் பயிற்றுவித்தார்கள். கோழிக்கும் காடைக்கும் சண்டை வைத்துள்ளனர் (கலி.95, புறம்.321). பறவைச் சண்டைகளில் இறுதியில் எந்தப் பறவை வீழ்த்தப் பெறுகிறதோ அந்தப் பறவையே வெற்றி பெற்ற பறவையாக அறிவித்தனர்.

**குருகு** :

சங்க காலத்தில் தலைவனைப் பிரிந்த தலைவி பொழுதினைப் போக்குவதற்குப் பூப்பறித்து விளையாடியும், விலங்குகளோடு பேசியும், பறவைகளை எண்ணி மகிழ்தலும் செய்து வந்தாள். இதனால் தலைவியின் மனம் அமைதியும், ஆறுதலும் பெற்றது. இதனை,

**“மணி துணிந்தன்ன மா இரும் பரப்பின்**
**உரவுத் திரை கொழீஇய பூ மலி பெருந்துறை**
**நிலவுக் குவிந்தன்ன மோட்டு மணல் இடிகரை**
**கோடு துணர்ந்தன்ன குருகு ஒழுக்கு எண்ணி**
**எல்லை கழிப்பினம் ஆயின்”**[19]

என்றுரைக்கிறது நற்றிணை பாடல். தலைவனைப் பிரிந்த தலைவி தனிமையைக் கழிக்க பகலில் குருகு பறவைகளை எண்ணி மகிழும் வாழ்வியலைக் காணமுடிகிறது.

**தம்பலப் பூச்சி** :

தலைவி தோழிவுடன் இருக்கும்போது நீராடுதல், தினைப்புனம் காத்தல், பறவைகளை விரட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறாள். இதனை,

**“அணி மிகு கானத்து அகன் புறம் பரந்த**
**கடுஞ் செம்மூதாய் கண்டும், கொண்டும்**
**நீ விளையாடுக சிறிதே”**[20]

என்று நற்றிணை பாடல் தெரிவிக்கின்றது. செம்மூதாய் என்று அழைக்கப்படும் தம்பலப் பூச்சியைத் தலைவி தோழிவுடன் இருக்கும்போது பிடித்து விளையாடுகிறாள்.

**நாரை** :

தலைவன் தலைவி அக வாழ்வில் பறவைகள் இன்றியமையாத காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் மிகுதியான இடங்களில் இடம் பெரும் பறவைகளுள் நாரையும் ஒன்றாகும். இதனை,

> **“குறுந்தொடி மகளிர் குரூஉப்புனல் முனையின்**
> **பழனப் பைஞ்சாய் கொழுதி, கழனிக்**
> **கரந்தைஅம் செறுவின் வெண்குருகு ஒப்பும்”**[21]

என்று அகநானூறு பாடல், பெண்கள் வெண்ணிற நாரையினை ஓட்டி விளையாடும் வாழ்வியலைக் காட்டுகிறது.

## முடிவுரை

தாவரங்கள் சார்ந்த பாடல்களில் சிறுவர்கள், தலைவன், தலைவி, தோழி, பரத்தையர் போன்றவர்கள் மூங்கில், புன்னை, வேம்பு, தென்னை, காஞ்சி மரங்களில் விளையாடிய வாழ்வியலை உணரமுடிகிறது. ஏறு தழுவுதல் என்பது முல்லை நிலத்தின் சிறந்த வீர விளையாட்டாகும். இதன் பரிணாம வளர்ச்சியாக இன்று ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது. ஆணின் வீரத்தினை அறியும் நிகழ்வாக ஏறு தழுவுதல் காணமுடிகிறது. அக்காலச் சமுதாயத்தில் சிறுவர்கள் கௌதாரி, கோழி, காடை போன்ற பறவைகளைச் சண்டையிடும் பறவையாகப் பழக்கி வைத்திருந்த வாழ்வியலை அறியமுடிகிறது. தலைவி குருகு என்ற பறவைகளை எண்ணி மகிழ்தலும், தம்பலப் பூச்சியைப் பிடித்தலும், நாரையை விரட்டி விளையாடிய வாழ்வியல் நெறிமுறைகளை சங்க இலக்கியத்தில் பெரிதும் காணமுடிகிறது. இன்றும் சிறுவர்கள முதல் பெரியவர்கள் வரை பறவைகளுடன் விளையாடி வருகின்றனர்.

## சான்றெண் விளக்கம்

1. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),நற்றிணை,பா.95:4-6.
2. ச.வே.சுப்பிரமணியன்,தமிழர் வாழ்வில் தாவரம்,ப.27.
3. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),நற்றிணை,பா.172:1-10.
4. வி.நாகராாசன்(உ.ஆ.),குறுந்தொகை,பா.303:5-7.
5. துரை.தண்டபாணி(உ.ஆ.),மணிமேகலை,கா.24,அடி.27-29.
6. இரா.செயபால்(உ.ஆ.),அகநானூறு,பா.230:5-7.
7. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),நற்றிணை,பா.3:2-3.

8. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),புறநானூறு,பா.61:8-9.
9. இரா.செயபால்(உ.ஆ.),அகநானூறு,பா.246:5-7.
10. மேலது,பா.286:4-5.
11. மேலது,பா.336:9-10.
12. ரா.பி.சேதுப்பிள்ளை,தமிழர் வீரம்,ப.72.
13. அ.விசுவநாதன்(உ.ஆ.),கலித்தொகை,பா.104:63-64.
14. மேலது,பா.105:30-31.
15. வி.நாகராசன்(உ.ஆ.),பட்டினப்பாலை,அ.76-77.
16. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),புறநானூறு,பா.321:1.
17. அ.விசுவநாதன்(உ.ஆ.),கலித்தொகை,பா.95:5-7.
18. ஞா.மாணிக்கவாசகன்(உ.ஆ.),ஐந்திணை எழுபது,பா.33:1-2.
19. கு.வே.பாலசுப்பிரமணியண்(உ.ஆ.),நற்றிணை,பா.159:1-5.
20. மேலது,பா.361:4-6.
21. இரா.செயபால்(உ.ஆ.),அகநானூறு,பா.226:4-6.

## துணைநூற் பட்டியல்

1. சுப்ரமணியன்.ச.வே, தமிழர் வாழ்வில் தாவரம், மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்,முதற் பதிப்பு-2014.
2. செயபால்.இரா(உ.ஆ.),அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,சென்னை,ஐந்தாம் பதிப்பு.2014.
3. சேதுப்பிள்ளை.ரா.பி,தமிழர் வீரம்,பாரிப் புத்தக நிலையம்,சென்னை,முதற் பதிப்பு.2011.
4. தண்டபாணி.துரை,(உ.ஆ.), மணிமேகலை, உமா பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு.2010.
5. நாகராசன்.வி(உ.ஆ.).,குறுந்தொகை., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.,சென்னை. ஐந்தாம் பதிப்பு., அக்டோபர்-2014.
6. பாலசுப்பிரமணியன்.கு.வே,(உ.ஆ.),நற்றிணை.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.
7. பாலசுப்பிரமணியன்.கு.வே,(உ.ஆ.),புறநானூறு.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.
8. மாணிக்கவாசகன்.ஞா,(உ.ஆ.),ஐந்திணை எழுபது,உமா பதிப்பகம், சென்னை,ஐந்தாம் பதிப்பு.2008.

9. விசுவநாதன்.அ,(உ.ஆ.),கலித்தொகை.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்.சென்னை.ஐந்தாம் பதிப்பு - 2014.